உ
சிவமயம்



தெல்லிப்பளை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும்
London, Colliers wood ஐ
வதிவிடமாகக் கொண்டவரும் வீமன்காமம் மகாவித்தியாலயத்தின்
முன்னாள் ஆசிரியருமான

# அமரர் உயர். திரு. சரவணமுத்து விசுவநாதன் அவர்கள்

சிவபதம் அடைந்ததை குறித்து வெளியிடப்பட்ட


# நினைவு மலர்

**31.05.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர். திரு. சரவணமுத்து விசுவநாதன் அவர்கள்



அன்னை மடியில் ஆண்டவன் அடியில்

**16 - 02 - 1927** **01 - 05 - 2010**

### திதி வெண்பா

ஆண்டு திவிர்தி அமை திங்கள் சித்திரையில்
பூண்ட அபரபட்ச சதுர்த்தியதில் - நல் ஆசான்
விஸ்வநாதன் விண்ணுலகம் தானேகி
நல்லபரன் தாள் அடைந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின் வடிவமென
ஆழ மனம் பதித்து
எம்மை அரவணைத்து
என்றும் அன்புதிர்த்தி
அறிவு பகுத்து தந்த
எம் அருமை மாமாவே

தாயின் பரிவுதனை
தந்தையிலே கண்டவர் நாம்
தாழ்விலும் வாழ்விலும்
தளராது தோள் தந்த தலைவனே

தரணியில் எம்முயர்வில்
உரந்தந்த உத்தமரே
உமை மறக்க முடியவில்லை
உளம் நெகிழுதையா.

உயிரால் அலங்கரித்து
உறவினால் தீபமேற்றி
ஞான தீப காணிக்கையாக
இம்மலரை நின் பாதத்தில்
சமர்ப்பிக்கின்றோம்.

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞானம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெரக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆவிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமாண பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானை கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாயவாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அன்னிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாதண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தையடி போற்றி
தேசன் அடிபோற்றி, சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய, உரைப்பன்யான்

கண் நுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி,
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய், விளங்கொளியாய்,
எண் இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல் ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய் தேவராய்ச்
சொல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்,
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்,
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா, விடைப்பாகா, வேதங்கள்
**"**ஐயா!**"** என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே.

வெய்யாய் தணியாய், இயமான னாம்விமலா,
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே,
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே,

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்துலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய் அருள்தருவாய்,
போக்குவாய் என்னை புகுவிப்பாய், நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே,

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான், வல்வினையேன் தன்னை

மறைந்ததிட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பு ஆகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே,
மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடரே,
தேசனே, தேனார் அமுதே, சிவபுரனே,
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே,
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே, அளவில்லாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே,
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே

அன்பருக்கு அன்பனே, யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே, துன் இருளே, தோன்றாப் பெருமையனே
ஆதியனே, அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே,
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்உணர்வே,
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே,
காக்கும் எம் காவலனே, காண்பரிய பேர்ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே, தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே, உடையானே,
வேற்று விகார விடக்குடம்பின் உள்க்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா! அரனேயோ! என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே, **"ஓ"** என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின், உள்ளார் சிவன் அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் அருளிய உடற்கூற்று வண்ணம்

ஒருமட மாதும் ஒருவனு மாகி
இன்பசு கந்தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறுசு ரோணித மீது கலந்து
பனியிலொர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கமடமி தென்று
பார்வை மெய்வாய்செவி கால்கைக ளென்ற
உருவமு மாகி உயிர்வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம கன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளு மறிந்து
மகளிர்கள் சேனை தரவணை ஆடை
மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளி நகையூறல் இளமட வாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாஇரு போஎன நாமம் விளம்ப
உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவி லிருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே
உயர்தரு ஞான குருஉப தேசம்
முந்தமி ழின்கலை யும்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து
மயிர்முடி கோதி அறுபத நீல
வண்டிமிர் தண்தொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க
மதன சொரூபன் இவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர்பிற கோடி
மங்கல செங்கல சம்திகழ் கொங்கை
மருவ மயங்கி இதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுத லாகி முது பொருளாய்
இருந்த தனங்களும் வம்பில் இழந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோத மடைந்து
செங்கையிலினோர் தடியுமாகியே
வருவது போவ தொருமுது கூனும்
மந்தியெ னும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து
துயில் வருநேரம் இருமல் பொறாது
தொண்டையும் நெஞ்சமு லர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மிழந்து
தோகையர் பாலகர் கோரணி கொண்டு
கலியுக மீதில் இவர் மரியாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவு மிராமல் உரைதடு மாறி
சிந்தையும் நெஞ்சமும் உலைந்து மருண்டு
திடமும் உலைந்து மிகவும் அலைந்து
தேறிநல் ஆதர வேதென நொந்து
மறையவன் வேதன் எழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனியென தொந்தம்
ஏதினி வாழ்வு நிலாதினி நின்ற
கடன்முறை பேசும் என உரைநா
வுறங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சுதடுமாறி வருநேரமே
வளர்பிறை போல எயிறும் உரோம
மும்சடை யும்சிறு குஞ்சியும் மிஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் கால மறிந்து
பழையவர் காணும் எனும் அயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியும் என்று
பலரையும் ஏவி முதியவர் தாம்
இருந்த சவம்கழு வும்சிலர் என்று
பணிதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை
வரிசை கெடாமல் எடுமென ஓடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடி அழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும்அடியேனை இனிஆளுமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருவாளர் சரவணமுத்து விசுவநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழத்தில் வடபால் மூர்த்தி, தலம், தீர்த்தம் என ஒருங்கே அமையப் பெற்று சிகரம் என விளங்கும் கீரிமலைக்கும் மாவிட்டபுரத்திற்கும் அண்மையாக அமைந்துள்ள கொல்லங்கலட்டிப் பகுதியில் இருபாலை குலவீரசிங்க முதலியார் வழி வந்த வேளான்குலதிலகம் திரு. சிதம்பரப்பிள்ளையின் புத்திரன் சரவணமுத்து செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாக 16.02.1927 அன்று திரு. விசுவநாதன் அவர்கள் இப் பூமியில் அவதரித்தார்.

இவர் முறையே திருவாளர்கள் நாகநாதன், முருகையா, பொன்னம்பலம், காசிப்பிள்ளை என நான்கு சகோதரர்களையும், வள்ளிநாயகி, பாக்கியலட்சுமி என இரு சகோதரிகளையும் உடன்பிறப்புக்களாகக் கொண்டு கொல்லன் கலட்டியில் சிறப்புற வாழ்ந்து வந்தார்.

அமரர் திரு விசுவநாதன் அவர்கள் தனது ஆரம்பப்படிப்பினை கொல்லன் கலட்டி சைவ மகாவித்தியாலயத்தில் திறம்பட முடித்துக்கொண்டபின் திறமை மிக்க ஓர் ஆசிரியராக கண்டி, றங்கலை, ஹற்றன், மாவிட்டபுரம், வீமன்காமம் மகாவித்தியாலயம் என தொழில் புரிந்து வந்த போது இவரிடம் கல்விபயின்ற மாணவர்களில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் புலமைப்பயிற்சிப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்று தெரிவு செய்யப்பட்டனர். அதன் மூலம் இவரின் திறமையை இனம் கண்ட கல்வித்திணைக்களம் இவரைப் பாராட்டி ஓர் பாராட்டு விழாவினை நடத்தி இவரைக் கௌரவித்து செய்திகளை வெளியிட்டது.

திரு. விசுவநாதன் அவர்கள் வாலிப வயதினை அடைந்தபோது மானிப்பாயைச் சேர்ந்த திரு. திருமதி. சுப்பிரமணியம் புனிதவதி ஆகியோரின் புத்திரியான சிவஞானவதியை மணம் முடித்து லண்டனில் சிறந்த கணக்காள ராகவும், புகழ்பெற்ற தொழில் அதிபராகவும், பிரித்தானிய தொழிற்கட்சி உறுப்பினராகவும் வாழ்ந்து அகால மரணமான திரு. ஸ்ரீகணேசகுமாரை ஏக புத்திரனாகக் கொண்டார். திருவாளர் ஸ்ரீகணேசகுமார் அவர்கள் அமரர் விசுவநா தன் அவர்களின் சகோதரி வள்ளிநாயகி சிவபாதசுந்தரம் அவர்களின் புதல்வி ஸ்ரீகௌரிதேவியை மணமுடித்து அஜந், தாட்சாயினி என இரண்டு செல்வங்களைப் பெற்றவர் ஆவார். ஸ்ரீகௌரிதேவியுடன் உடன்பிறந்தவரான திரு.இராமச்சந்திரன் அவர்கள் சித்திரா என்னும் நங்கையை மணமுடித்து துளசி, ஷரீனா எனும் செல்வங்களைப் பெற்று லண்டனில் சிறந்த வர்த்தகராக வாழ்ந்து வருகிறார். திரு. விசுவநாதனின் சகோதரர்கள் ஆன திருவாளர் நாகநா தன், முருகையா, காசிப்பிள்ளை ஆகியோர் திருமணம் ஆகுமுன்பே காலமாகி விட்டனர். திரு. பொன்னம்பலம் அவர்கள் கொல்லன் கலட்டியைச் சேர்நத திரு. திருமதி தம்பு அவர்களின புத்திரியான இராஜேஸ்வரியை மணமுடித்து வெள்ளவத்தையில் பிரபல்ய வர்த்தகராக வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. விசுவநாதனின் இன்னுமோர் சகோதரியான பாக்கியலட்சுமி அவர்கள் திரு.சுப்பிரமணியம் அவர்களை மணமுடித்து கொழும்பில் வசித்து வருகின்றனர். இவர்களின் ஏக புத்திரியான சிவரஜனி அவர்கள் திரு. சூரியகுமாரை மணம் முடித்து அமரர் விசுவநாதனின் இறுதி நாட்கள் வரை அவருடன் கூடவே வாழ்ந்து வந்தார்.

திரு. விசுவநாதன் அவர்களின் ஏக புத்திரன் ஆன அமரர் திரு.கணேச குமரர் அவர்கள் பிறந்து இரண்டே ஆண்டுகளின் தாயாரை இழந்து நின்றபோது அவருக்கு தானே தாயுமாகி, தந்தையுமாகி அவரை வளர்ப்பதிலும் படிக்கவைத்து ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்காய் தனது இரண்டு சகோதரிகளுடன் சேர்ந்து அரும்பாடுபட்டு அதில் வெற்றியும் கண்டார். திருவாளர் விசுவநாதன் அவர்கள் பிறவியிலேயே சைவராக வாழ்ந்து தினமும் அதிகாலை கொல்லன் கலட்டி வீரகத்தி விநாயகரைச் சென்று வணங்கி பின்னரே தனது அன்றாட அலுவல்களை ஆரம்பிப்பதை வழக்கமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். அத்துடன் கீரிமலை, நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் என்பவற்றிக்கும் சென்று அங்கே நடக்கும் பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்வதுடன் நின்றுவிடாது ஆலய வளர்ச்சிப் பணிகளிலும், சமய வளர்ச்சிப் பணிகளிலும் பங்கு கொண்டு வாழ்ந்து வந்தார்.1980ம் ஆண்டின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக கொல்லன் கலட்டிப் பகுதி யில் இருந்து இடம்பெயர்ந்து சங்கானைப் பகுதியில் வாழ்ந்து வந்த பின் 1989ம் ஆண்டு மைத்துனர் திரு சிவஞானசேகரத்தின் உதவியுடன் இலண்டன் நகர் சென்று தனது மகனுடன் மற்றும் உற்றார் உறவினருடனும் வாழ்ந்து வந்தார். இலண்டனில் வசித்து வந்த போதும் விம்பிள்டன் கணபதி ஆலயம் சென்று ஆலய வழிபாடுகளிலும் ஆலய சமய வளர்ச்சிப் பணிகளிலும் ஈடுபட்டு வந்ததுடன் தனது கணீர் குரலில் இசைஞானத்துடன் பண்பாடி அடியார்களை கவர்ந்து வந்தார். அதற்கு ஓர் உதாரணமாக இவரை ஒரு சங்கீத வாத்தியார் என நினைத்து இவரிடம் சங்கீத வகுப்பு நடாத்தித் தரும்படி கேட்டவர்கள் பலர்.

அத்துடன் நின்று விடாது தனது பேரப்பிள்ளைகளான அஜந், தாட்சாயினி, துளசி, ஷரீனா ஆகியோருக்கு சமயப்பற்றினையும், மொழிப்பற்றி னையும் வளர்ப்பதில் பெரும் அக்கறை கொண்டு வாழ்ந்து வந்தார்.

குடும்பத்திற்கு ஓர் ஒளிமயமான ஜோதியாகவும், சமூகத்திற்கு ஓர் தொண்டனாகவும், சமயப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட திரு விசுவநாதன் அவர்கள் 01.05.2010 சனிக்கிழமை இரவு 10.50 மணியளவில் இப்பூவுலகை விட்டு இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே என் அத்தான் மாமா?

எனது சிறுவயது முதலே அத்தான் மாமா, அத்தான் மாமா எனவே நான் உங்களை அழைப்பேன். எல்லோரும் என்னைக் கேட்பார்கள் அத்தான் மாமா என்ன உறவுமுறை என்று ஆனாலும் சிறு வயதிலிருந்தே அத்தான் மாமா என உங்களை அழைத்த நான் இறுதி வரை அப்படியே அழைத்து வந்தேன். நான் சிறுமியாக இருக்கும் போதே என் மேல் உயிரையே வைத்திருந்தீர்கள். அதேபோல் நான் பருவமடைந்த போது உங்கள் மகனையே எனக்குத் திருமணம் முடித்து வைத்து எனக்கு ஒரு சிறப்பான வாழ்கையை அமைத்துத் தந்ததோடு உங்கள் உறவுகளையும் பலப்படுத்திக் கொண்டீர்கள். உங்கள் சகோதரியான எனது அம்மா மேலும் உங்கள் உறவினர் நண்பர்களுடனும் நீங்கள் கொண்டிருந்த அன்பையும் பாசத்தினையும் பழகும் விதத்தையும் பார்த்து இப்படித்தான் குடும்பமென்றால் இருக்கவேண்டும், ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையாகவும் பாசமாகவும் இருக்க வேண்டும் என கற்றுக் கொண்டேன்.

உங்களது மகன் (எனது கணவர்) தனது இரண்டாவது வயதி லேயே தனது தாயாரை இழந்து நின்ற போது நீங்களே தாயுமாகி தந்தையுமாகி படிக்க வைத்து ஆளாக்கி இலண்டன் அனுப்பி மேற்கொண்டு படிக்கவைத்து அந்நிய மண்ணிலேயே புகழ் பெற்ற மனி தனாக ஆக்கி அதை உங்கள் கண்களால் கண்டு

" ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்டதாய்

என்ற குறளுக்கு அமைய நீங்கள் பட்ட இன்பமும் வெற்றியும் எதிலுமே உறுதியுடன் செயற்பட்டால் வெற்றி நிட்சயம் என்பதனை எனக்கு உணர வைத்தது.

எங்கள் மகன் அஜந் பிறந்தபோதும் மகள் தாட்சாயினி பிறந்தபோதும் உங்கள் பேரப்பிள்ளைகளைக் கண்டு நீங்கள் அடைந்த சந்தோசத்திற்கு எல்லையே இல்லை அவர்களுடன் இருக்கும் வேளை-களில் எல்லாம் நீங்கள் ஒரு குழந்தையாக மாறி விடுவது உண்டு. அதே போல் அவர்களுக்கு அறிவுரை கூறும்போது கண்டிப்பான ஓர் ஆசிரியரையே நாம் காணக்கூடியதாக இருக்கும் அதனால் தான் எனது பிள்ளைகள் இந்த அந்நியநாட்டிலும் தாய்மொழிப்பற்றும் சமயப்பற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு ஒழுக்கமானவர்களாக இருப்பதில் உங்களது கண்டிப்பினைக் கண்டேன். இப்படி எத்தனை எத்தனை படிப்புக்களை எங்களுக்கு ஊட்டினீர்கள். பாடசாலையில் மட்டும் ஒரு ஆசிரியராக இல்லாமல் அனைவருக்கும் ஓர் நல்ல ஆசானாக வாழ்ந்து காட்டினீர்கள்.

உங்கள் மகனை இளவயதிலேயே இழந்து விட்ட போதும் நீங்கள் பட்ட வேதனையைக் காட்டிக் கொள்ளாமல் எங்களுக்கு நீங்கள் ஆறுதல் கூறி வந்தீர்கள். இன்று உங்களையும் ஆண்டவன் தனது பாதத்தில் சேர்த்துக்கொண்டார். உங்கள் ஆத்மா சாந்தியடையஅந்த ஆண்டவனை வேண்டிநிற்கின்றேன்.

**மருமகள்: ஸ்ரீ கௌரிதேவி**

## எனது தாத்தாவுக்காய்

எங்களுடன் வாழ்ந்து எங்களை எல்லாம் விட்டுப் பிரிந்து விட்ட அன்புத் தாத்தா. நீங்கள் எங்களுடன் வாழ்ந்த காலங்கள் மறக்க முடியாதவை. எப்படியெல்லாம் குடும்பத்திலும் நண்பர்களுடனும் இருக்க வேண்டும் என நல்ல பழக்கங்களையும் ஒழுக்கத்தையும் சொல்லித் தருவதில் ஆசிரியராக இருந்தீர்கள். ஆனால் எனக்கு ஒரு தாத்தாவாகவும் இருந்தீர்கள். உதாரணத்திற்கு என்னுடன் படிக்கும் மாணவர்கள் விடுமுறைக்கு அமெரிக்கா செல்ல திட்டமிட்டபோது நானும் அம்மாவிடம் அனுமதி கேட்டேன். ஆனால் அம்மா என்னை தனியே அனுப்பத் தயங்கிய போது அம்மாவிடம் " படிக்கிற பிள்ளைகளை தனிய விட்டுப் பழக்கு" எனக்கூறி உங்களின் செலவிலேயே என்னை அனுப்பிவைத்து குடும்பத்தினரை விட்டு தனியே சென்ற முதல் விடுமுறை ஆனதினால் எப்படி என்னால் மறக்க முடியாதோ அப்படியே உங்களையும் என்னால் மறக்க முடியாது.

**பேரன் - அஜந்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசைத் தாத்தாவிற்காய்

தாத்தாவிற்கு நான் ஒரு செல்லப்பிள்ளை நான் இன்று வளர்ந்து விட்ட போதும் இந்த இயலாத வேளையிலும் என்னை தனது மடியில் இருத்தி உணவு ஊட்டிவிடுவதும் எனது சுக துக்கங்களை கேட்டு அறிந்து கொள்வதிலும் என்னை ஒரு குழந்தையாகவே நினைத்து தானும் ஒரு குழந்தையாக மாறி விடுவதிலும் ஓர் தாத்தாவாகவே வாழ்ந்து வந்தார். அதே நேரம் நான் படித்து எனது அப்பாவைப் போல் பேரும் புகழும் அடையவேண்டும் என திரும்பத் திரும்பத் கூறி எனது மனதில ஒரு வைராக்கியத்தை உருவாக்கினீர்கள். உங்கள் கையால் எனக்கு உணவூட்டி வளர்த்தீர்கள். இறுதியில் உங்களுக்கு நான் உணவூட்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தேன். காத்திருந்த எனக்கு உணவூட்ட நீங்கள் திரும்பவில்லை.

**பேத்தி: தாட்சாயினி**

## மைத்துனர் இரங்கல்

திருவாளர் விசுவநாதன் அவர்களும் நானும் கொல்லன் கலட்டியைச் சேர்ந்தவர்கள் என்பதனை விட நாம் இருவரும் ஓர் நல்ல நண்பர்களாகவே ஆரம்பக் காலத்தில் இருந்தோம். இருவரும் சேர்ந்து கீரிமலை, நகுலேஸ்வரம். மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் என சைக்கிளில் செல்வோம். அப்போது எனக்கு திருவாளர் விசுவநாதனின் மேல் ஒரு மரியாதை இருந்தது. காரணம் இவர் தனது குடும்பத்தில் மூத்தவராக இருந்து தனது குடும்பத்தை கவனித்த முறையும் ஒற்றுமையுமே இவரின் மேல் ஓர் தனி மரியாதையை ஏற்படுத்தி இருந்தது. சில காலத்தின் பின் எனக்கு எதுவுமே சொல்லாமல் எனது தந்தையிடம் வந்து எனது சகோதரிக்கு என்னை மணம் முடித்துவைக்க விரும்புவதாக கதைத்து இருந்தார். ஆனால் ஆரம்பத்தில் அவ்வளவு இலகுவாக இரு குடும்பமும் ஒத்துழைக்காமல் இருந்த போது இவரது விடா முயற்சி வெற்றிபெற்று இரு குடும்பமும் ஏற்றுக் கொண்ட பின்னரே எனக்கு இவ்விடயம் தெரிய வந்தது. நான் அவரது சகோதரியை மணமுடித்த பின்பு அவரது குடும்ப ஒற்றுமையும் பண்புகளும் என்னை ஆச்சரியப்பட வைத்தது என்பது உண்மை. நாம் இருவரும் இலண்டன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த பின்னரும் இருவரும் ஒன்றாக இருந்து கதைக்கும்போது நேரம் போவதே தெரிவதில்லை. ஓர் சிறந்த குடும்பத் தலைவனாக, ஓர் சிறந்த சமயத் தொண்டனாக, ஓர் சிறந்த நண்பனாக எனது சிறுவயதில் இருந்தே ஒன்றாக வளர்ந்து இறுதிவரை ஒன்றான நண்பனாக மைத்துனனாக வாழ்ந்து அமரனடி சேர்ந்த விட்ட அமரர் விசுவநாதனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகினடறேன்.

**மைத்துனர்: சிவபாதசுந்தரம்**

## என்னுயிர் அண்ணா

எங்கள் குடும்பத்தில் ஆறுபேருக்கும் மூத்தவனாய் பிறந்து எங்கள் எல்லோரையும் ஆளாக்குவதற்கும், குடும்பத்தில் எல்லோரும் ஒற்றுமையாக இருப்பதற்கும் நீங்கள் கடந்து வந்த பாதை மிகக் கடி-னமானது என நான் அறிவேன். சகோதரங்கள் ஐவரை நான் இழந்தபோது ஆறுதலுக்காய் நீங்கள் தான் இருந்தீர்கள். அண்ணா இன்று நீங்கள் ஆண்டவன் அடியில் சேர்ந்து விட்டீர்கள். ஆனாலும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய நீங்கள் தினமும் வணங்கும் வீரகத்தி விநாயகரை வேண்டுகின்றேன்.

**தங்கை பாக்கியலட்சுமி**

## அத்தான் மாமா

எனது அம்மாவின் சகோதரன்தான் அத்தான்மாமா. என் அத்தானின் அப்பா என்பதால் அவரை அத்தான் மாமா என சிறுவயதிலிருந்தே கூப்பிடுவோம். அவர் அந்த முறைமையை நியாயமாக்கி எனது சகோதரிக்குத் தன் ஒரே மகனைத் திருமணம் முடித்து வைத்தார். சிறு-வயதில் நான் கல்விகற்கும் காலத்தில் எனக்கு ஒவ்வொரு வருடமும் புத்தம் புதிய நூல்களை கொண்டு வந்து தருவார். லண்டனிற்கு வந்த பின்பு தன்னுடன் பிள்ளையார் கோவிலுக்கு கூட்டிச்சென்று என்னையும் இறைபணியில் ஈடுபடச்செய்வார்.

நான் திருமணம் முடித்து என் மனைவியுடன் லண்டன் திரும்பி வந்தபோது எங்களை அன்புடன் ஆசீர்வதித்து வாழ்த்தினார். எங்கள் பிள்ளைகளிற்கு பெயர் சூட்டுவதற்குரிய முறைகளை கூறி நன்கு வாழ வழிகாட்டியவர். என் பிள்ளைகளைக் கண்டவுடன் கட்டி அணைத்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவார். அவர் எம்மை விட்டுப்பிரிந்தாலும் அவருடைய நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்.

**மருமகன்: ராம், மருமகள் சித்ரா**

## கண்ணாடித் தாத்தா

கண்ணாடித் தாத்தா மிகவும் அன்பானவர். நல்ல பண்புமிக்கவர். அவர் கண்ணாடி அணிந்திருப்பதால் அவரை கண்ணாடித் தாத்தா என்று செல்லமாக கூப்பிடுவோம். நாம் அவருடைய வீடு செல்லும்போதெல்லாம் எங்களை அன்புடன் உபசரித்துப் பேசுவார். அவருக்கு பேரப்பிள்ளைகள் என்றால் மிகவும் விருப்பம் எம்முடன் மிகவும் பாசமாக இருப்பார். அவர் எம்மை விட்டுப் பிரிந்தது எம்மை மிகவும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பேரப்பிள்ளைகள்**
**துளசி, ஷரீனா**

## மருமகள் இரங்கல்

மாமா நான் உங்கள் இறுதி நாட்கள் வரை உங்கள் அருகிலேயே இருந்து உங்கள் இயலாத நேரத்தில் உங்களிற்கு பணிவிடை செய்ய முடிந்தது எனது பாக்கியம்.

என்னையும் எனது கணவரையும் பிரிந்து நீங்கள் ஒரு கணம் கூட இருந்தது இல்லை. இன்று எம்மை விட்டு நிரந்தரமாக சென்று விட்ட போதும் உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றுமே நீங்காது. ஓர் தந்தையாக ஆசானாக எமக்கெல்லாம் அறிவுரை கூறி எம்மை ஆளாக்கி வைத்தீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**மருமகள்: சிவரஜனி சூரியகுமார்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Siva Shri*
***V. Ramanatha Vakeeswara Kurukkal***
***Hindu Priest***
*9 Warlingham Road, Thornton Heath, Surrey, CR7 7DF, 0208 6898679*

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் வானுறை தெய்வத்தில் உறைவர் என்றதற்கமைய திருவாளர் சரவணமுத்து விசுவநாதன் வாழ்ந்து காட்டியவர். இவர் யாழ் தெல்லிப்பழை கொல்லங் கலட்டியைச் சேர்ந்த திருவாளர் சரவணமுத்து, செல்லம்மா தம்பதிகளின் மகனாகப் பிறந்தவர். இவர் நல்ல ஆசிரியராகப் பணியாற்றியவர். ஸ்ரீமதி சிவஞா னவதி எனும் மங்கையை மணந்து ஸ்ரீகணேஷ்குமார் எனும் புத்திரச் செல்வத்தையும் பெற்றிருந்தார். பெற்றதாயாரை இழந்து தனியொருவராக வளர்த்த மகனையும் லண்டனுக்கு அனுப்பி வைத்தார். தானும் தனயனுடன் வாழ இந்நாட்டுக்கு வந்து தங்கியிருந்த காலத்தில் நாள் தவறாது விம்பிள்டன் பிள்ளையார் கோவிலுக்கு வந்து வழிபடுவார். இந்நாட்களில் தான் என்னுடன் மிக நெருக்கமாக பழகிவந்தார். அவரது உயர்ந்த பண்புகளால் நானும் அவருடன் மிகுந்த மரியாதையும் அன்பும் வைத்திருந்தேன். தனது மகனாகிய குமாருக்கு தனது சகோதரி மகளான ஸ்ரீகௌரிதேவியை விவாகம் செய்து செல்வன் அஜன், செல்வி தாட்சாயினி எனும் இரு பேரப்பிள்ளைகளையும் பெற்று மனம் குளிரவளர்த்து வந்தார். அந்நேரத்தில் தான் கடவுளின் சோதனை போல தாயகம் சென்ற மகனை விபத்தில் பறிகொடுக்க நேரிட்டது. அதனால் மிகவும் மனம் தளர்ந்தே இருந்து வந்தார். அன்னாரின் மறைவு செய்திகேட்டு நான் மிகவும் கவலை அடைந்தேன். ஒரு நல்ல ஆசானை இழந்தவனானேன். அவரது குடும்பத்தினருக்கு எனது இரங்களை தெரிவிப்பதுடன் அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**இராமநாதவாகீஸ்வரக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அமரர் திருவாளர் சரவணமுத்து






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவநாதன் அவர்கள் வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல மனிதர் விசுவநாதன் ஐயா

ஆன்மீக வாதியாக இறையருளின் பலத்தோடு வாழ்ந்து இறைவனடி சேர்ந்த பெரிய நல்ல மனிதர் சரவணமுத்து விசுவநாதன் ஐயாவை நினைத்துப்பார்கின்றேன்.

பார்ப்பதற்கு சாதாரணமான ஒரு மனிதராக அவர் வாழ்ந்த காலத்தில் காணப்பட்டாலும் அவரிடமிருந்த நேர்மையும் ஒழுக்கம் நிறைந்த செயற்பாடுகளும் தமிழும் சைவமும் அவர் நெஞ்சமெல்லாம் வாழ்நாள் முழுவதும் நிறைந்து இருந்ததினாலும் அவர் போற்றுதலுக்குரி யவராகிறார்.

கற்றவர்களையும் பெருமைக்குரியவர்களையும் பெற்றெடுத்த தெல்லிப்பழை கொல்லன் கலட்டியில் சரவணமுத்து செல்லம் தம்பதி யினருக்கு மகனாகப் பிறந்து வளர்ந்த அன்னார் ஆசிரியராகி மலை நாட்டில் கற்றன் முதல் வீமன்காமம் வரை பல பாடசாலைகளில் சிறப்பான கல்விப்பணி ஆற்றியிருக்கிறார். ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக அவர் பணியாற்றிய காலத்தில் ஆசிரியப்பணிக்கு கௌரவம் தேடிக் கொடுத்திருக்கிறார்.

இவை எல்லாம் அவரை இலண்டனில் சந்தித்த பிறகு அறிந்து கொண்ட தகவல்கள். அவரது மகன் காஞ்சென்ற குமார், மருமகள் கௌரி ஆகியோருடன் எனக்கு ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்தினால் விசுவநாதன் ஐயாவுடன் பேசிப்பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது.

பிறந்த போதே குமார் தன் தாயாரைப் பறிகொடுத்தவர். தந்தையார் இலண்டனுக்கு வருவதற்கு முன்னரே குமார் மூலம் இதனை அறிந்திருந்தேன். அதன் பின்னர் அவரது தந்தையார் திருமணம் செய்யாமலே இருந்த விபரங்களையும் குமார் மூலமாகத்தான் தெரிந்துகொண்டேன். விசுவநாதன் ஐயாவை பார்க்காமலே அவர் மீது ஒரு உயர்ந்த மதிப்பை மனம் பதித்துக்கொண்டுவிட்டது. சிவஞானவதி என்ற அம்மையாருடன் ஆகக்கூடினது இரண்டு ஆண்டுகள் தான் வாழ்ந்திருபார். அந்த நினைவுகளுடன் குமார் என்ற தன் மகனின் உறவோடு கடைசிவரை வாழ்ந்திருக்கிறார். இப்படியும் ஒரு மனிதரா? மாகாத்மா காந்தி கூட இப்படி வாழ்ந்ததில்லை.

அவரை முதலில் இலண்டன் கொலியேஸ்வூட்டில் உள்ள குமாரின் இல்லத்தில் பார்த்தபோது ஒரு உயர்ந்த மனிதராகத்தான் தென்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விம்பிள்டன் பிள்ளையார் கோவிலில் பக்த்தனாக ஒரு தொண்டனாக, அடியானாக பலமுறை பார்த்திருக்கின்றேன். பூசை முடிந்த பிறகு நெஞ்சுருகத் தேவாரம் பாடுவார். திருநீறு சந்தனம் பக்த்தர்களுக்கு கொடுப்பார்.

பேப்பர் கொண்டு வந்தனீரோ? எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்பார். புதினம் பத்திரிகையை தவறாது படிப்பார். ஆரவரரமில்லாத அடக்கமான இந்த மனிதர் சில வருடங்களுக்கு முன் பிள்ளையார் கோவில் அவர் பணிக்காக கௌரவிக்கப்பட்டபோது பெரிதும் மகிழ்ந்தேன்.விலாசம் காட்டிக்கொள்ளாமல் அமைதியான ஒரு நல்ல மனிதரை கௌரவித்தது, அமரர் இரத்தினசிங்கத்தின் மகள் திருமதி.மகேஸ்வரன் வழங்கிய இந்தக் கௌரவம் என் மனதில் இன்னமும் இருக்கிறது.

எனக்கு உறவினரான அமரர் சிவஞானசேகரம் இவரது மைத்துனர். இறந்த மனைவியின் சகோதரர் தன் மைத்துனர் மீது மிகுந்த பாசம் கொண்டவர். மச்சான் மச்சான் என்று பேசிக்கொள்வதைப் பார்த்திருக்கிறேன். தனது மகன் குமார், மற்றும் தாங்கள் எல்லாரும் இங்கு வருவதற்கு அவர் பல உதவிகள் செய்தாரென்பதை விசுவநா தன் ஐயா ஒரு முறை சொல்லியிருக்கின்றார்.

அன்னார் மிகப் பண்பானவர். பிறவிச் சைவரான அவர் அசைவத்தின் மணம் கூட சமையலின் போது இருப்பதை ஏற்றுக்கொள்ளாதவர்.

தனது மருமகள்கள் கௌரி மீதும் சிவா மீதும் மிக அன்பு கொண்டிருந்தார். அவருடனேயே சிவா குடும்பம் தங்கியிருந்து உதவி யாக இருந்ததைக் குறிப்பிடவேண்டும்.

பேரப்பிள்ளைகளோடு மிகப் பாசமாக இருந்தார். அவர் இறந்த அன்று பேத்தி தட்சாவை பல் வைத்தியராக நினைத்தபடி வாயைத் திறந்து காட்டிக் கொண்டே தன் மரணத்தைத் தழுவிக் கொண்டார். பேரன் அஜனும் அங்கு அப்போது இருந்தார்.

எவருக்குமே கடைசிவரை கஷ்டம் கொடுக்காத நல்ல மனிதரை இழந்துவிட்டோம். நல்லதையே நினைத்து நல்லதையே செய்யும் நல்ல மனிதர்கள் சாவதில்லை. அவர்கள் நினைவுகள் மனங்களிலே வாழும். அப்படியான ஒரு பெரியவர்தான் விசுவநாதன் ஐயா.

அவர் ஆத்மா சாந்தி அடைக.

**ஈ.கே. ராஜகோபால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியப் பெருந்தகை

ஒரு கிராமத்தவனாக அயலவனாக குடும்ப நண்பனாக அமரர் விஸ்வநாதன் அவர்களோடு ஒட்டியவன் என்ற உணர்வில் அவர் மறைவு குறித்து மனம் வருந்துகின்றேன்.

உத்தமன் என்று ஊரில் நித்தம் போற்றப்பட்டவர். அமைதியான சுபாவம். ஆசிரியம் ஒளிவீசும் கம்பீரம். எடுப்பான தேசிய உடை அணி. எவருடனும் இசைந்து போகும் இயல்பு. அர்ப்பணிப்போடு ஆசிரியத் தொழில் புரிந்த பாங்கு என்பன அமரருக்கு ஊரில் நல்ல உபாத்தியாயர் பெயரைப் பெற்றுத் தந்தன.

மணம் புரிந்த குறுகிய காலத்திலேயே மனைவியை இழந்தார். மறுமணம் புரியாமல் ஏகமகனின் எதிர்காலத்திற்காக தனிமரமாக வாழ்ந்தார். மருமக்களோடு ஒருமித்த குடும்பமாக கலந்தவர். இறைபக்த்தனாக வழிபட ஆலயங்களோடு சரியை வழிபாட்டில் ஒன்றியவர். மொத்தத்தில் எதிர் நீச்சலோடு வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

தந்தைக்கு முந்தியே விபத்தில் பலி கொண்ட இவர் ஏக மைந்தன் அமரர் ஸ்ரீகணேசகுமார் அவர்களின் எச்சமாக சேவையில் உச்சமட்ட புகழை புகலிட நாட்டில் கொண்டவர். அவர் கல்விச் சேவையில் சட்டன் தமிழர் சார்பாக கண்ட கனவை நனவாக்கிய வகையிலும் மூன்றாண்டுகளை நிறைவு செய்து தொடர்ந்து பரந்த சேவையில் சிறந்து நிற்கின்ற வகையிலும் அவரையும், அவரை ஊக்குவித்த ஆசிரியர் விசுவநாதன் அவர்களையும் சட்டன் தமிழ்ப் பாடசாலையும் என்றும் நன்றியோடு நெஞ்சில் இருத்தும். ஆசிரிய பெருந்தகை அமரர் விசுவநாதன் ஆத்மா சாந்திக்கு அஞ்சலிசெய்கின்றோம்.

நன்றி
பாவை ஜெயபாலன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## APPRECIATION - VISWANATHAN MASTER.

While attending the funeral ceremony on the 9th of May at Morden cemetery paying my last respect to Viswanathan Master, I was reminiscing the fondest memories of my family's association with his family for the last seven decades. Known affectionately as Master by his friends and colleagues, eldest of five brothers and two sisters he opted for a career in teaching and was attached to various schools in Sri Lanka.

As a small child I vividly remember my late mother referring to his late mother as Sellakka. We were in the same neighbourhood in kollankaladdy and his family was always ready and willing to help us in times of need. All of his brothers were friendly with my family. After my family moved to Colombo his brother late Mr. Ponnambalam (affetionately called kadaikara Ponnambalam) lived in close proximity to our house in first chapel lane and was always helpful and respected my late mother.

After masters marriage he was unfortunate to be in a difficult position to see his wife die of cancer. During this troubled period, our family especially my late mother had the unique opportunity to look after his only son Kumar when he was an infant, at our house in Pamankada lane. This she did with great enthusiasm and alacrity. After the untimely death of his wife after Kumar's birth , he became a dedicated faithful father and looked after his only son, who as we know became eminent in his own way and contributed and played a prominent role in our society before his untimely tragic death.

After 30 years Master maintained his links with my family and made sure to visit me in London with his son ( late Kumar) and another close friend of our family Thuraikuddi Vithanaiyar. This is a moment I relished and it gave me the opportunity in reflecting back of our memories about kollankaladdy .

Master was humble and soft spoken; he was unassuming, calm and collected at all times. He was also an extremely religious person with an exemplary character and performed his duties to perfection. Indeed he was a real Gentleman, simply put, he was a man of great virtue. My brother Mr.Viswanathan would have loved to be there to pay his last respects on Sunday the 9th if not for the fact he is in Colombo at the present time.

May Master's soul rest in peace and may he attain supreme enlightenment. He will always remain enshrined in our hearts.

**DR.C.PADMANATHAN.**
Chigwell.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MAY HIS SOUL REST IN PEACE

I am filled with deep sense of sorrow at the passing away of Mr. Visvanathan Saravanamuthu. I pray that the Almighty God may comfort all the people who go through the hard time due to his departure.

Late Mr. Visvanathan was a religious man and lived his life in complete dedication to the Lord. He was a beloved child of God. He told everybody about his faith in the Lord. Do not be surprised that he went through some times of lack of peace, due to his one and only beloved noble son, late Mr.Sriganeshakumar's unexpected tragic death which occurred in 2005 when he had gone to help the Tsunami affected people at Jaffna peninsula in Sri Lanka.

When Mr. Visvanathan started to feel sick he couldn't wait to go and be with the Lord. I think no matter how close you walked with God, there will be some fear when you think about stepping in eternity, just because is a place where you've never stepped in before. After I prayed for him, I felt that God's peace filled his heart and the last battle was won, by the grace of the Almighty God. And what a blessing for you to know that he is resting in the bosom of God and smiling with the angels. Wow, what a comfort that brings!!!

I just wanted to let you know that there are some other children of God who experienced lack of peace and fear before they surrendered completely in God's arms. Probably he is a good example for us to prove that God will never forsake us and He holds us to the end.

I assure you my humble prayers for the departed soul of Mr.Visvanathan and those who miss his physical presence in this transitory world. Also I pray to the Almighty God that He may grant him continual growth in His love and service, and to give us grace so to follow his good example, that with him we may be partakers of His heavenly kingdom.

May the soul of Mr. Visvanathan, through the mercy of God rest in peace.

Thinking of him and keeping him in my prayers,
**Rev.Dr.R.Antoneyo.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்த்தானம்
# ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரசுவாமி திருக்கோயில்

ஈசான சிவாச்சாரியார்,
ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக்குருக்கள்,
அறங்காவலரும், பிரதம சிவாச்சாரியாரும்,
புனருத்தாருணக்குழுத் தலைவரும்.

சிதம்பரேஸ்வரம்,
மாவை கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை,
இலங்கை.

அமரர் சரவணமுத்து விஸ்வநாதன் (இளைப்பாறிய அதிபர்) இலண்டனில் அமரத்துவமடைந்தார். அமரர் விஸ்வநாதன் மாஸ்டரை மிகச்சிறு வயதி லிருந்து தெரியும். நன்றி மறவாத பெருந்தகை கொல்லங் கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகப்பெருமான் மீது பெரும் பக்தி கொண்டவர். பாடசாலை விடுமுறையில் வந்து தினமும் கோயில் தரிசனம் செய்வது வழமை.

மகோற்சவ காலங்களில் வெளியூரில் படிப்பிக்கும்போது லீவு போட்டு வந்து தரிசனம் செய்வதுடன் திருத்தொண்டும் செய்வார்.

எதைக்கேட்டாலும் கோவிலுக்கு இல்லை என்று சொல்ல மாட்டார். திருவெம்பாவை மிருக சீருட நட்சத்திரத்தன்று பூசையும் 21ம் நாள் பெருங்கதையில் விசேட அபிசேகமும் மகன் ஸ்ரீகணேசகுமாரின் பெயரில் செய்து வருவது வழமை.

தற்போது மகோற்சவத்தின் கொடியேற்ற கொடியிறக்க திருவிழாவை மகன் தொடக்கியபோது வந்து தரிசித்து திருவூஞ்சல் பாடல் பாடி மகிழ்ந்ததை மறக்கமுடியாது.

அன்னாரின் பிரிவால் துயருறும் உற்றார் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா ஸ்ரீசிவகாமசுந்தரவல்லி உடனுறை ஸ்ரீமத்சிதம்பரேஸ்வரப் பெருமானின் பாத கமலங்களை அடைய அபரிமிதமாகப் பிரார்த்திக்கின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சு.சிவசண்முகானந்தக் குருக்கள்**
அறங்காவலர்
பிள்ளையார் கோவில் சிவன் கோவில்
கொல்லங்கலட்டி
தெல்லிப்பழை
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Shree Ghanapathy Temple
## Wimbledon

உ

எங்கள் ஆலயம் முப்பதாவது ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் கடந்த காலங்களில் பல அடியார்கள் விநாயக பெருமானின் ஆலய கைங்கரியங்களில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார்கள். ஈழதிதில் அவரவா் ஆலயங்களில் தம்மை ஈடுபடுத்தி தொண்டுகளை செய்து மனநிறைவு பெற்றவா்கள் வயது முதிா்ந்த நிலையில் வெளிநாடு வந்து தனித்து வீட்டிலே அடைந்து கிடந்து மனம் புழுங்காமல் ஊரிலே இருந்து வாழ்ந்தது போன்று ஆலய தொண்டுகளில் தம்மை ஈடுபடுத்தி மன நிறைவு பெறுவதற்கு ஆலயங்கள் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

அவ்வகையில் மாவிட்டபுரம் வீமன் காமம் மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியா் திருவாளா் சரவணமுத்து விசுவநாத மாஸ்டா் அவா்கள் விநாயக ப்பெருமானின் பாதத் பேற்றினைப் ற்றுள்ளாா்.

வயது முதிா்ந்தபோதும் ஆலயத்திற்கு தினமும் இருவேளையும் வந்து தீபாராதனை செய்வதற்கு ஆயத்தங்களைச் செய்து புண்ணியத்தைப் பெற்றவா்.

கடந்த நான்கைந்து வருடமாக உடல் நலமில்லாமல் ஆலயத்திற்கு வருவது குறைந்திருந்தாலும் விநாயகப் பெருமானுடைய அருளுக்கு பாத்திரமானவராக இருந்தாா். அவருடைய தன்னலமில்லா வாழ்வும் இறையன்பும் யாரிடமும் அடிபணியா பண்பும் ஈகைக்குணமும் அவருடைய வாழ்வின் அடையாளங்கள்.

இன்னேரம் அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

விசுவநாத மாஸ்டரின் ஆன்மா விநாயகப் பெருமானுடைய பாதார விந்தங்களில் நிழல் பெற்று சாந்தி பெற பிராா்த்திப்போம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இங்கனம்

அறங்காவலா்

விம்பிள்டன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
Love is God

# ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்
# Sri Nagulambika Sametha Sri Naguleswara Swamy Temple

Rajarajasri K. Naguleswara Kurukkal
Governing Authority & Chief Priest
Naguleswaram, Keerimalai,
Kankesanthurai, Sri Lanka.
021-3212440, 021-7900470



"நகுலேஸ்வரானுக்கிரக வித்தியாதரர்"
ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வர குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை
காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா
021-3212440, 021-7900470

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் வண்ணை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சேவகமூர்த்தி விஸ்வநாதன் அவர்கள் காலமான துக்ககரமான செய்தியை அறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். ஒரு அன்பான தொண்டராகவும் நண்பராகவும் இருந்தவரை இழந்து விட்டோம்.

மறக்க முடியாது இன்கிறது சிறுவயது தொட்டு கோயிலுடன் நகுலேஸ்வர ஆலயத்துடன் மிகுந்த நெருக்கமாக செயல்பட்டவர். ஆலயத்துக்கு திருப்பணி. வேலைகளுக்கும் உபயங்களை ஏற்று நடத்துவதற்கும் பின் நிற்க மாட்டார். எங்கே என்ன கேட்டாலும் இல்லை என்று சொல்ல அவரிடம் இல்லை. அவர் மட்டுமல்லாது நகுலேஸ்வர ஆலயத்துடன் அவருடைய குடும்பத்தையும் இணைத்துக் கொண்டார் அன்பான வார்த்தைகளாலும் தர்மச்செயல்களாலும் எல்லோருடைய மனதிலும் இடம் பிடித்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது உறவினர்க்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நகுலேஸ்வர பெருமானுக்கு நெய்த்தீபம் (மோட்சதீபம்) ஏற்றி பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

சிவ/ஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும்
பிரதம குருவும்
கீரிமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
குகமயம்

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்
# MAVIDDAPURAM KANTHASWAMY TEMPLE

மஹாராஜஸ்ரீ
சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
ஆதீன கர்த்தா - பிரதமகுரு,
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

T.P : 021 222 5798

Maharajasri:
S.D. Shanmuganatha Kurukkal
*Governing Authority & Chief High priest*
*Mavai Aadheenam.*
*Maviddapuram, Sri Lanka.*
**TELLIPPALAI** ..11/5/2010

சாந்தியுரை

சைவநெறியைக் கண் தந்த வாழ்வினை முன்வைத்து
(அன்பு வழிந்து) இறைமை தன்மை சான்றோரையும், பிறரையும் அவ்வழி வாழ்க்கை
என ஒருபடுத்தியது அறிவுரை ஆற்றியவர் சான்றோரது
அனைவரைத் தந்தவர். பூசைகளது கிரியைகளை அறிவு
மூலம் தான் அல்ல சைவ நிகழ்வுகளுக்கு மூலகாரணமான அவைகளே
ஆலயங்களே என்ற அசைக்கமுடியாத கொள்கைகளோடு
கிரியை கிரியை தொண்டுகளால் ஆலயங்களை நடத்து
கருத்தர் இப்பெருமகன். இவரது குடும்பம் உறவினர்
பெருமதிப்பிற்கு பாத்திரமாகவே விளங்கியது. அத்தோடு
தீர்க்கமான முறையில் இராமத்தையும், அந்நாட்டையும்
வளம்பெற பூசைகளை விளங்க அயராது பாடுபட்டவர்
இந்நல்லாசிரியர். இவரது மேதையாகவும் அவ்வாறே
வாழ்ந்து காட்டினார். அந்த வழியை இவரோ
கொண்டு அத்தனை ஆதாரங்களுடனும் துணைகொண்டு
வாழ்ந்து காட்டினார், மக்களையும் இதே வழியில்
வாழ்க்கையை உபதேசித்தார்; இறைவனது
அனுக்கிரகங்களையும் பெற்று மண்ணில் வாழ்ந்து
இறையடி இணைந்துவிட்டார். ஆயினும் இத்தனையே
பிறந்தவர் இறப்பதும் இயற்கைதானே.
அன்னாரது ஆத்மசாந்திக்காக யாவும்
மாவைக் கந்தனிடம் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ அருள்
மஹாராஜஸ்ரீ சீ.து. ஷண்முகநாத குருக்கள்
மாவையாதீனகர்த்தா - பிரதம குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAHAJANA COLLEGE
## OLD STUDENTS ASSOCIATION
**United Kingdom**
## மகாஜனக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
ஐக்கிய இராச்சியம்

E-Mail: info@mahajana.com

அநுதாபச்செய்தி

**திரு ச விஸ்வநாதன் ஆசிரியர் அவர்கள்**

தெல்லிப்பழை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் இறுதிக் காலத்தில் ஐக்கிய இராச்சியத்தைத் தனது வதிவிடமாகவும் கொண்ட திரு சரவணமுத்து விஸ்வநாதன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுத் துயருறுகின்றோம்.

நீண்டகாலம் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் ஆசிரியராகக் கடமையாற்றி உன்னதமான மாணவர் சமூகம் ஒன்றினை உருவாக்கிய ஆசிரியர் அவர்கள் எமது பழைய மாணவரான, காலம்சென்ற ஸ்ரீகணேசகுமார் அவர்களின் தந்தையாவர். எமது பழைய மாணவியான திருமதி ஸ்ரீகௌரிதேவி கணேசகுமார் அவர்களின் மாமனாரும் ஆவார்.


சில வருடங்களிற்கு முன்பாக இடம்பெற்ற தனது ஒரேமகன் அமரர் ஸ்ரீகணேசகுமார் அவர்களின் அகால மரணம், ஆசிரியர் அவர்களை மிக ஆழமாகப் பாதித்து விட்டது. அந்த அதிர்ச்சி ஏற்படுத்திய பாதிப்புடனேயே அவர் தனது இறுதிநாட்களைச் செலவுசெய்தார். நிறைந்த சைவ பக்தரான அமரர் விஸ்வநாதன் ஆசிரியர் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலர் எமது கல்லூரியின் மாணவர்களாகத் திகழ்ந்தனர்.

அமரர் விஸ்வநாதன் ஆசிரியர் அவர்களின் மறைவினால் துயருறுகின்ற அனைவருக்கும், குறிப்பாக அவரின் மருமகள், பேரக்குழந்தைகள் ஆகியோருக்கு எமது சங்கத்தின் சார்பிலும், மகாஜனக் கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

தலைவர்
நாக.சிறிகெங்காதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்

அமரர் திரு சரவணமுத்து விசுவநாதன் அவர்களின் மறைவைக் கேள்வியுற்று தொலைபேசி மூலமும், நேரிலும், மின்னஞ்சல் மூலமும், அனுதாப அட்டைகள் மூலமும் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களிற்கும் சகல வகையிலும் உதவியவர்களிற்கும், மலர் வளையங்கள் மூலமும் மூலமும் அஞ்சல் உறை மூலமும் துயர் பகிர்ந்தவர்களிற்கும் மரண அறிவித்தல் மற்றும் பிரிவுச் செய்தி-களையும், கண்ணீ அஞ்சலிகளையும் ஒலிபரப்பிய வானொலி இணையத்தள பத்திரிகை நண்பர்களுக்கும் இந் நினைவு மலரை சிறப்புற அச்சேற்றிய வாசன் அச்சகத்தினருக்கும் அந்தியேட்டிக் கிரிகைகளிலும், வீட்டுக் கிரிகைளிலும் பங்கு ஏற்றவர்களுக்கும் ஆத்ம சாந்திப் பூசைகளிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்,
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.

'இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்'
–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

ஹரே கிருஷ்ணா! ஹரே ராமா!



Printed by Vasan Printers, 020 8646 2885

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org